**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**

**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

O.S. NO. 331 /2022

**<u>Deposition of the witness:</u>** P.W. **1**

Solemnly affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அண்ணாதுரை |
| Father's Name | : | பழனியப்பன் |
| Village | : | வடக்கு நாகர்கோவில் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | - |
| Age | : | 61 |
| Date | : | 02.06.2026 |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இந்த அசல் வழக்கில் 2 ஆம் வாதியாவேன். எனக்காகவும் முதல் வாதிக்கும், மூன்றாம் வாதிக்கும் சேர்த்து என்னுடைய சாட்சியத்தில் நிரூபண வாக்குமுலத்தை கடந்த 02.06.2026-ல் தாக்கல் செய்துள்ளேன். முதல் விசாரணையின் தொடர்ச்சியாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். ஆவணங்களை குறியீடு செய்ய இடைக்கால விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு இருப்பதால் நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள ஆவங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். 07.08.1936 ஆம் தேதியிட்ட OS.No.14/1108 முதன்மை நீதிமன்றம் நாகர்கோவில் வழங்கிய டிரஸ்ட் ஸ்கீம் டிகிரி மற்றும் அதன் தமிழாக்கம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1

ஆகவும், 26.09.1981 ஆம் தேதியிட்ட O.S. No. 394/1980 முதலாவது கூடுதல் உரிமையியில் நீதிமன்ற தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 2 ஆகவும், 26.09.1981 ஆம் தேதியிட்ட O.S. 394/1980 முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 3 ஆகவும், 20.01.2021 ஆம் தேதியிட்ட 2021-2024 டிரஸ்டு தேர்தல் குறித்தான தினத்தந்தி விளம்பரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 4 ஆகவும், 14.02.2021 ஆம் தேதியிட்ட டிரஸ்டு தேர்தலில் வெற்றி பெற்றதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் சான்றிதழ் நகல் வா.சா.ஆ. 5 ஆகவும், 12.08.1991 ஆம் தேதியிட்ட 4052/1991 பிரதிவாதி பெயருக்கு சிதம்பரம் மற்றும் நடராஜன் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 6 ஆகவும், D. 25/1081 224 கரத்தீர்வை ரசீது அசல் வா.சா.ஆ. 7 ஆகவும், 28.11.2022 ஆம் தேதியிட்ட சிட்ட அசல் வா.சா.ஆ. 8 ஆகவும், ரீசெற்றில்மென்ட் ரெஜிஸ்தர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 9 ஆகவும், 19.11.2022 ஆம் தேதியிட்ட Ref No. 30/2022 பிரதிவாதிக்கு டிரஸ்டு அனுப்பிய வழக்கறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 10 ஆகவும், 21.11.2022 ஆம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதலட்டை அசல் வா.சா.ஆ. 11 ஆகவும், 07.10.1977 ஆம் தேதியிட்ட O.S. No. 452/1976 முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 12 ஆகவும், 20.12.1980 ஆம் தேதியிட்ட A.S. No. 195/1979 முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்ற தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 13 ஆகவும், 28.07.1998 Second Appeal No. 1637/1983 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 14 ஆகவும், 1104 வைகாசி 10 3497/1104 ME வாதி டிரஸ்டின் முன் டிரஸ்டிகளான சிவசுப்பிரமணியம் மற்றும் ராமசாமி பெயருக்கு பிரதிவாதியின்

தகப்பனார் ராமகிருஷ்ணய்யர் எழுதிக் கொடுத்த தரை வாடகை பத்திரம் தமிழாக்கத்துடன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 15 ஆகவும், 22.01.1986 ஆம் தேதியிட்ட 18/1986 பிரதிவாதியின் தகப்பனார் ராமகிருஷ்ணய்யர் எழுதி வைத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 16 ஆகவும், O.S. No. 190/1983 Suit Register சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 17 ஆகவும், O.S. 180/1983 Suit Register சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 18 அகவும், 05.03.2025 ஆம் தேதியிட்ட W.P. (MD) No. 7839/2015 மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 19 ஆகவும் மற்றும் திருவிதாங்கூர் சமஸ்தானம் அகஸ்தீஸ்வரம் தாலுகா 13 வது நம்பர் நாகர்கோவில் பகுதியிலே ஸெட்டில்மெண்டு ரிஜிஸ்தர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 20 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

ஆவணங்களை பார்த்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதா' பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.